# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள். 06.07.2026**

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.CP 3521/D/2024**

திரு மா.ஆதிகிருஷ்ணன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
திட்ட உதவியாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தெற்கு புறவழிச்சாலை,
திருநெல்வேலி மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 19.06.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | ---- |
| பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவின் நாள் | 30.07.2024 |

******

**ஆணை**

இன்று 06.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு மா.ஆதிகிருஷ்ணன் அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு ரெ.ராஜா, திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தெற்கு புறவழிச்சாலை, திருநெல்வேலி மாவட்டம் அவர்கள் மட்டும் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 19.06.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், 02.05.2024 அன்று உயர்திரு உறுப்பினர் செயலாளர்,

உள்ளூர் திட்ட குழுமம் அலுவலகம், திருநெல்வேலி அவர்களிடம் பதிவு அஞ்சல் மூலம் அளித்த புகார் மனுவின் நகல் தொடர்பான 22 இனங்களில் தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம் அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 18(1)ன் கீழான 30.07.2024 தேதியிட்ட புகார் மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் திருநெல்வேலி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் தொடர்புடையது என்பதால் மனுதாரரின் மனுவானது தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றம் செய்யப்பட்டதாகவும், மேலும், மனுதாரர் கோரிய அனைத்து இனங்களுக்கான தகவல்களை 26.07.2024, 25.09.2024 மற்றும் 03.07.2026 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை பதிவஞ்சல் மூலம் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை இவ்வாணையத்தில் சமர்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரர் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது இவ்வாணையத்தால் உறுதி செய்யப்பட்டு, இப்புகார் மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

தகவல் அறியும் உரிமைச் சட்டம்

**<u>வழக்கு எண்.CP 3521/D/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
திட்ட உதவியாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தெற்கு புறவழிச்சாலை,
திருநெல்வேலி மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு மா.ஆதி கிருஷ்ணன்,
த/பெ. திரு மாரியப்பன்,
க.எண்.2/138/1, பசும்பொன் நகர்,
வசவப்பபுரம், திருவைகுண்டம்,
தூத்துக்குடி மாவட்டம் - 628 252.

***Copy to: File***
***VP / PA***